**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No.** 1025/2023

**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் தேதி புதன்கிழமை ம.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ம.சா.** | : | 3 | | | |
| **பெயர்** | : | **சக்திவேல்** | **தொழில்** | : | **சர்வீஸ் இஞ்ஞினியர்** |
| **த/பெ.** | : | **கலியபெருமாள்** | **வட்டம்** | : | அரியலூர் |
| **கிராமம்** | : | நுறையூர் | **வயது** | : | 31 |

<u>**29.04.2026**</u>

**(புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் எதிரி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனவே எனது சாட்சியம் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் BE Mechanical படித்துள்ளேன். எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரியில் (2012 –2016) படித்தேன். நான் BE படித்ததற்கு சான்றிதழ் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் எங்கு எங்கு வேலை செய்துள்ளேன் என்றால் 6 மாதங்கள் அரசு சிமெண்ட் பேக்ட்ரியில் தனியார் கான்ட்ராக்ட்டில் பெல்ட் மாற்றும் வேலை செய்தேன். திருச்சி Vivo மொபைல் கம்பெனியில் Promoter ஆக வேலை செய்தேன். அதன் பிறகு 2021–ல் RR Scale நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். அங்கு என்ன வேலை செய்தேன் என்றால்

வெயிட் மிஷினை ரிப்பேர் செய்யும் வேலை. RR Scale நிறுவனம் என்பது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் என்றால் சரிதான். வெயிட் மிஷினை ரிப்பேர் செய்யும் வேலைக்கான சான்றிதழ் என்னிடம் இல்லை என்றால் சரிதான். அந்த தொழில் நுட்பம் சார்ந்த படிப்பை நான் படிக்கவில்லை என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் நான் பதிவு பெற்ற ஊழியரா என்றால் இல்லை. என்னுடைய தனிப்பட்ட வங்கி கணக்கில் RR Scale நிறுவனத்திற்கு வரவேண்டிய பணத்தை பெறுவது தவறு என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிறுவனத்தின் சார்பாக வருமான வரி கணக்கு நான் தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எதிரி யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி பணம் போட சொன்னதன் அடிப்படையில் வங்கி கணக்கில் பணம் போட்டேன் என்றால் சரிதான். எதிரி வாங்கிய கடன் பற்றிய முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வங்கியில் பணம் போட்டது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் அங்கு வேலை செய்யவில்லை என்றாலும் எதிரி எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு Employee ID இருக்கிறதா என்றால் இல்லை. நான் அனுப்பிய பணபரிவர்த்தனைக்கும் இந்த வழக்கின் காசோலைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.